

தூதுவர் ஜுலீ ஜே. சங்

தூதுவர் ஜுலீ சங் 2022 பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக கொழும்பினை வந்தடைந்தார். சிரேஷ்ட வெளியுறவுச் சேவையின் தொழில்நிலை அங்கத்தவரான அமைச்சர்-ஆலோசகர் தரத்திலுள்ள திருமதி. சங் இந்தோ-பசிபிக் மற்றும் மேற்கு அரைக்கோளப் பிராந்தியம் முழுவதும் பல சிரேஷ்ட பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

திருமதி. சங் மிக அண்மைக்காலத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மேற்கு அரைக்கோள விவகாரங்களுக்கான பணியகத்தின் உதவிச் செயலாளராக பதில்கடமையாற்றினார். ஜப்பானுக்கான பிரதி உதவிச் செயலாளர் (பதில்கடமை), கம்போடியாவில் பிரதித் தூதுவர், தாய்லாந்தில் பொருளாதார ஆலோசகர் போன்ற பதவிகள் உட்பட, கிழக்காசிய மற்றும் பசிபிக் விவகாரங்களுக்கான பணியகத்தில் விரிவான அனுபவத்தையும் அவர் பெற்றுள்ளார். அவற்றிற்கு மேலதிகமாக, அவர் ஈராக், கொலம்பியா, வியட்நாம் மற்றும் ஜப்பானில் உள்ள அமெரிக்க தூதரகங்களிலும், சீனாவின் குவாங்சோவில் உள்ள அமெரிக்க துணைத்தூதரகத்திலும் பணியாற்றியுள்ளார். வொஷிங்டனில் உள்ள கொரிய விவகாரங்களுக்கான அலுவலகத்தில் பணியாற்றும் போது, வட கொரியாவுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட சட்டகத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆயுதப்பெருக்கத்தடை தொடர்பான கலந்துரையாடல்களில் ஆலோசகராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

திருமதி. சங் கலிபோர்னியாவின் ஹண்டிங்டன் கடற்கரையைச் சேர்ந்தவர் மற்றும் தோமஸ் ஆர். பிக்கரிங் பெலோஷிப் நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் குழுவில் 1996 இல் வெளிநாட்டு சேவையில் இணைந்தார். அவர் கலிபோர்னியா சான் டியாகோ பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் இளங்கலைப் பட்டத்தினையும், மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சர்வதேச விவகாரங்களில் முதுகலைப் பட்டத்தினையும் பெற்றார். திருமதி. சங் செயலாளரின் சிறப்புமிக்க கௌரவ விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார், மற்றும் அவர் கொரிய, ஜப்பானிய, ஸ்பானிய மற்றும் கெமர் மொழிகளைப் பேசக்கூடியவராவார்.